DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 75/2023**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1 absent petition filed. A2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காளீஸ்வரி | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**<u>18.07.2023</u>**

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் இராமேஸ்வரம் மாந்தோப்பில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன்.ஆஜர் 2 வது எதிரி மற்றும் எதிரி மெல்டசை தெரியும். கடந்த 01.08.2019-ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் என் வீட்டிற்கு வந்து என்னை அடித்து என் காதில் இருந்த தோட்டை அறுத்து காயத்தை ஏற்படுத்தினார்கள்.

2. பின்னர் 1 வது எதிரி மெல்டஸ் கல்லை கொண்டு என் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். சம்பவத்தை என் அம்மா, தங்கை ராஜேஸ்வரி ஆகியோர்கள் பார்த்து விலக்கிவிட்டார்கள். பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் வந்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் மனு என் தங்கச்சி கொடுத்தார். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பம் அ.சா.ஆ-1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**